மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) விருதுநகர் மாவட்டக் கல்வி அலுவலர் அப்பள்ளிக்குச் சென்று குற்றச்சாட்டுகளை விசாரித்தார். பள்ளி ஆசிரியர்களுக்கும், நிர்வாகிக்கும் கருத்து வேறுபாடு இருந்ததை சுமுகமாகத் தீர்த்து வைத்தார். தற்போது அவர்கள் முழு ஒத்துழைப்புடன் பணியாற்றுகிறார்கள்.

Township Committee, Kodaikanal

... *76. Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the *Hon.* tne Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a sum of Rs. 2 lakhs being a grant from Government for construction of a tourist rest house has not been utilised by the Township Committee, Kodaikanal, for the last two years;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) when the construction is proposed to be started?

கோடைக்கானல் நகரியக் குழு

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயணிகள் ஓய்வு இல்லம் ஒன்று கட்டுவதற்காக அரசிடமிருந்து மானியமாகப் பெற்ற ரூ. 2 லட்சம் கடந்த இரண்டாண்டுக் காலமாக கோடைக்கானல் நகரியக் குழுவால் பயன்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?

(உ) கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மானியமாக ஏதும் வழங்கப்படவில்லை. ஆனால் 1970 ஆம் வருடத்தில் கடனாக மட்டும் ரூ. 1.5 இலட்சம் கோடைக்கானல் நகரியத்தில் சுற்றுலா பயணிகள் விடுதி ஒன்று கட்டுவதற்காக வழங்கப்பட்டது. அந்தத் தொகை மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் 24—2—70 ஆம் தேதியிலிருந்து முதலீடு செய்யப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 19]

(இ) கோடைக்கானல் நகரியம், மேற்கூறிய விடுதியின் முதலில் தயாரிக்கப்பட்ட வடிவமைப்பில் உள்ள அறைகள் தற்கால வசதிகளும், போதுமான காற்றோட்டமும் கொண்டிராது எனக் கருதப்பட்டதால் அந்த விடுதியின் வடிவமைப்பை மாற்றத் தீர்மானித்தது. அரசும் அந்த வடிவமைப்பு மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்தது. ஆயினும் அதற்கு தொழில் நுட்ப ஒப்புதல் பெறுதல், ஒப்பந்தப் புள்ளி கோருதல் முதலிய விதிமுறைகளை அனுசரிக்க வேண்டியுள்ளதால் கடனாக அளிக்கப்பட்ட ரூ. 1.5 இலட்சம் இன்னும் செலவிடப்படாமல் உள்ளது.

(உ) மேற்கூறிய முறைகள் முடிந்துவிட்டன. அனுசரித்தான பின் வேலை சீக்கிரம் தொடங்கப்பெறும்.

Railway Cess Fund

* 77 Q.—Thiru SAW GANESAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the West Thanjavur District Development Council has requested the Government to utilise the Railway Cess Fund for establishing an Agricultural College in the district; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

இரயில்வே செஸ் நிதி

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த இரயில்வே செஸ் நிதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மேற்குத் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சிக் குழு அரசினை வேண்டிக் கொண்டதென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.